திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர் கிராமம் பொருநை அருங்காட்சியகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன் தினம் (18.02.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.உடன் பொதுப்பணித்துறை அரசுச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மரு.இரா.செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.சுகுமார், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ்.மணிவண்ணன் ,பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் ,துணை மேயர் கே.ஆர்.ராஜு உட்பட பலர் உள்ளார்கள்.

நெல்லை பொருநை அருங்காட்சியகம் ஏப்ரல் மாதம் முடிக்கப்படும்!

பெருவெள்ளத்தால் சேதமடைந்த சாலைகளை செப்பனிட ஒன்றிய அரசு நிதி தர வேண்டும்!

நெல்லையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு பேட்டி!

நெல்லை, பிப்.20-

நெல்லை பொருநை அருங்காட்சியகம் பணிகளை ஏப்ரல் மாதம் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. என்றும் கனமழை பெரு வெள்ளத்தால் சேதம் அடைந்த சாலைகளை செப்பனிட ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதி கிடைக்கப் பெறாமல் இருக்கிறது. பாஸ்ட் டேக் புதிய விதிமுறைகள் மக்கள் மீது செலுத்தப்படும் சுமை. தளர்வுகள் ஏற்படுத்த ஒன்றிய அரசிடம் வலியுறுத்தப் படும் என்றும் நெல்லையில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

பொருநை ஆற்றங்கரையில் நடத்தப்பட்ட அகழ் வாய்வில் கிடைக்கப் பெற்ற பொருட்களை காட்சிப்படுத்தி தமிழர் நாகரிகத்தை உலகறிய செய்யும் வகையில் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் நெல்லை ரெட்டியார்பட்டி குலவணிகர் கிராமத்தில் ரூ 56 கோடி 36 லட்சம் மதிப் பீட்டில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இந்த பணிகளை பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரடியாக பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் அதிகாரி களிடம் செய்ய வேண்டிய பணிகள் தொடர்பாக கேட்டறிந்தார். தொடர்ந்து பொதுப் பணித்துறை அரசு செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், நெடுஞ்சாலைத்துறை அரசு செயலாளர் இரா.செல்வராஜ்,மாவட்ட ஆட்சியர் மருத்துவர் இரா.சுகுமார், மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்ரா, மற்றும் துறை சார்ந்த அலுவலர் களுடன் முன்னேற்றப் பணிகள் குறித்தும் மாவட்டத்தில் நடந்து வரும் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை பணிகள் தொடர்பாகவும் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர் களிடம் கூறியதாவது.

தமிழர்களுடைய வரலாற்று அடையாளங்கள்!

முதலமைச்சர் அவர்களின் இந்த திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற காலத்தில் இருந்து தமிழர்களின் அடையாளங்கள் உலகத்திற்கே தெரிய வேண்டும் என்ற அடிப்படையில் பல் வேறு முன்னெடுப்பு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறார். அந்த வகையில் மதுரை கீழடியில் தமிழர்களுடைய வரலாற்று அடையாளங்கள் எல்லாம் வகைப் படுத்தி, முறைப்படுத்தி காட்சி படுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்கள் எல்லாம் வந்து போகும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நெல்லையில் பொருநை அருங்காட்சியம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் 09.09.2022 -ல் அறிவித்தார்கள் சட்டம். முதலமைச்சர் அவர்களால் 18.05.2023 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அதன்படி நெல்லை மாவட்டம் ரெட்டியார்பட்டி பகுதியில் பொருநை அருங்காட்சியகம் ரூ 56 கோடியே 36 லட்சம் மதிப்பில் 13 ஏக்கரில் 54,000 சதுர அடியில் அமைக்கப்பட்டு வருகிறது.

ஆதிச்சநல்லூர் தொகுதி A மற்றும் B கட்டிடம் 16,486 சதுர அடியில் தரைத்தளம் மற்றும் முதல் தளமும்,சிவகளை கட்டிடம் 8991 சதுர அடியில் தரைத்தளம்,முதல் தளம்,கொற்கை தொகுதி A மற்றும் B கட்டடம் 17429 சதுர அடி தரைத்தளம், முதல் தளம் எனவும். மேலும் அறிமுக காட்சி கட்டிடம் கைவினைப் பொருட்கள் பணிமனை,ஒப்பனை அறைகள் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது. மேலும்அகலாய்வு நடத்தப்பட்ட இடங்களான கொற்கை, ஆதிச்சநல்லூர் சிவகளை,உள்ளிட்ட பகுதிகளில் கிடைக்கப்பெற்ற பொருட்களை வைப்பதற்கு தனி தனியாக கட்டிடங்கள் 7 பிரிவுகளாக அமைக்கப்பட்டுள்ளது. தற்போது 75 சதவீத பணிகள் நிறைவு பெற்றுள்ளது. கலைவடிவம் செய்வது,ஒவ்வொரு கட்டிடத்திற்கும் இணைப்பு சாலை அமைக்கவும், மின்விளக்குகள்,பூங்காக்கள் வண்ண விளக்குகள்,வர்ணம்பூசுவது திறந்தவெளி திரை யரங்கம்,அழகு நிறைந்த குளம்,குளத்தின் மீது பாலம்

அமைக்கவும், சுற்றுச்சுவர்,நீரூற்று அமைக்கும் பணிகள் நடந்து வருகிறது.

மே15 ம் தேதி வரை பணிகள் முடிக்க கால அவகாசம் இருக்கும் நிலையில் ஏப்ரல் மாதத்திற்குள் (அதாவது 30.04.2025)அருங்காட்சியக பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டு ள்ளது. பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.நெல்லையில் நடைபெற்ற சிறப்பான நிகழ்வுகளில் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு குழந்தைக்கு முத்தம் கொடுத்தது வைரலாக பரவியுள்ளது.

நெல்லை மண் முதலமைச்சர் அவர்களுக்கு மனம் நிறைந்த உணர்வுகளை ஏற்படுத்தி உள்ளது.

பாஸ்ட் டேக் முறை அகற்றப்படும்!

மாநில நிதியில் இருந்து நேரடியாக அமைக்கும் சாலைகளில் சுங்கசாவடி அமைக்கபடுவதில்லை. தேவைக் கேற்ப அவசரமாக போடும் சாலைகளுக்கு நிதியை உலகவங்கியில் கடனாக பெறும் போது சுங்க சாவடிகளை அமைப்பதில் தவறு இல்லை. ஒன்றிய அரசு மாநில அரசிடம் 7 மீட்டர் சாலையை 10 மீட்டர் சாலையாக மாற்றுவதாக வாங்கி கொண்டு சுங்க சாவடிகள் ஒன்றிய அரசு மூலம் அமைக்கப்படுகிறது. காலவதியான சுங்க சாவடிகளை எடுக்க ஒன்றிய அரசிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.பெரு வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகளை செப்பனிட மத்திய அரசிடம் இருந்து வரவேண்டிய பணம் வரவில்லை.மாநில நெடுஞ்சாலைகளில் பணி மேற்கொள்ள வரவேண்டிய பெரும் பணம் வரமால் இருப்பதால் பணிகளில் தாமதம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.ஒன்றிய அரசிடம் 600 கோடிக்கு திட்டம் தயார் செய்யப்பட்டு அனுப்பிய நிலையில் தற்போது தான் ஒன்றிய அரசு மூலம் சிறுக சிறுக நிதி கொடுக்கப்பட்டு வருகிறது. பாஸ்ட் டேக் புதிய விதிமுறைகள் மக்கள் மீது செலுத்தப்படும் சுமை,இது தவறான செயல்.பாஸ்ட் டேக் அமைப்பை முறைப்படுத்த வேண்டும். பணம் இல்லை என்றால் அபராதம் போடுவது சரியில்லை.டெல்லி செல்லும் போது ஒன்றிய அரசிடம் புதிய விதிகளை தளர்த்த வலியுறுத்தப்படும்.நெல்லை தென்காசி சாலை பணிகள் விரைவில் முடிவடையும் என்றார்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், முன்னாள் எம்.பி ஞானதிரவியம், மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜூ,சென்னை மண்டல தலைமை பொறியாளர் மணிகண்டன்,மதுரை மண்டல தலைமை பொறியாளர் செல்வராஜ்,தொல்லியல் துறை இணை இயக்குனர் சிவானந்தம், கட்டடக்கலை வல்லுநர் சோபனா கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜ்குமார்,மகாவிஷ்ணு,மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம்,பொதுக்குழு உறுப்பினர்கள் ராமச்சந்திரன், நடராஜன்,மாவட்ட துணை செயலாளர் நம்பி,ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன்,பரணி சேகர்,செல்வகருணாநிதி,மாவட்ட அணி அமைப்பாளர்கள் செல்வசூடாமணி, முருகன், பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை, வழக்கறிஞர் ஏ.எல்.பி. தினேஷ் தகவல் தொழில் நுட்ப அணி காசிமணி உள்பட கழகத்தினர், மற்றும் செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள்,அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் வேப்பனபள்ளியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி வேப்பனபள்ளி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நபார்டு திட்டத்தின் கீழ், ரூ.2 கோடியே 35 இலட்சம் மதிப்பில் 10 வகுப்பறை கட்டிடங்களின் கட்டுமானப் பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார், மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. முருகன், கிழக்கு மாவட்ட அவை தலைவர் நாகராஜ், மாவட்டத்துணை செயலாளர சின்னசாமி, பொதுக்குழு உறுப்பினர் ஜெயராமன், ஒன்றிய செயலாளர்கள் ரகுநாத், கருணாகரன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தென்காசியில் 4864 பயனாளிகளுக்கு

ரூ.40.85 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் வழங்கினார்!

தென்காசி, பிப்.20-

தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே. கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்று 4864 பயனாளிகளுக்கு ரூபாய் 40.85 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கியும், ரூபாய் 23.94 கோடி மதிப்பில் 22 கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டியும் வைத்தார்.

பின்னர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

தென்காசி மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றுள்ளது. இதில் திறக்கப்பட வேண்டிய கட்டிடங்கள்,விரைவுபடுத்தப்பட வேண்டிய பணிகள், எதிர்காலத் தேவைகள் உள்ளிட்டவை குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.நமது மாவட்டத்திற்கு முதலமைச்சர் அவர்கள் விரைவில் வர உள்ளார்கள்.எனவே அது தொடர்பான பணிகளை விரைவுபடுத்த ஆட்சியருக்கு அறிவுரை வழங்கி இருக்கிறோம். முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா,புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா மற்றும் எதிர்கால தேவைகள் குறித்த பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் பல புதிய திட்டங்களை அறிவிப்பார்கள். மருத்துவக் கல்லூரிக்கான இடம் பார்வையிட இருக்கிறோம். அதேபோன்று சங்கரன்கோவில் பகுதியில் சிப்காட் அமைப்பதற்கும் இடம் பார்வையிட செல்கிறோம். கீழப்பாவூரில் புதிய யூனியன் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற உள்ளது.மருத்துவக் கல்லூரிக்கு மூன்று இடங்கள் பரிசீலனையில் உள்ளது.ஆட்சியர் சில இடங்களை பரிந்துரை செய்திருக்கிறார்.

பொதுமக்கள் எளிதாக வந்து செல்லும் வகையில் வசதியான இடத்தை தேர்வு செய்து அறிவிப்போம்.

சங்கரன்கோவில் பகுதியில் சிப்காட் அமைப்பதற்கும் இடம் பார்வையிட செல்கிறோம்.சிப்காட் அமைப்பதற்கு 1000,ம் ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதுவும் தொழில் தொடங்குவோர் இந்த இடத்தை தேர்வு செய்தால் வருவார்கள் என்கின்ற அளவிற்கு வசதிகளுடன கூடிய இடத்தை தேர்வு செய்து அறிவிப்போம்.முதல்வர் அவர்கள் வருகை தேதி இன்னமும் முடிவாகவில்லை. விரைவில் இருக்கும்.

தி.மு.க.வில் அ.தி.மு.க.வில் இருந்து வந்தவர்களுக்கு பதவி என்று அண்ணாமலை கூறுவது தவறு. எம்ஜிஆர், ஜெயலலிதா இறந்தபோது அங்கு தலைமை சரியில்லை என்று கருதிய பலர் தி.மு.க.விற்கு வந்தனர்.

என்னைப் பொறுத்தவரை எம்.ஜி.ஆர் இறந்த போது தி.மு.க.விற்கு வந்து விட்டேன்.தமிழகத்தை வழிநடத்த தகுதி உள்ள ஒரே தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தான் என்பதை ஏற்றுக் கொண்டு எம்ஜிஆர் இறந்த போது வந்து விட்டேன்.20, 25 ஆண்டுகள் இந்த கட்சியில் இருக்கிறோம்.சிலர் ஜெயலலிதா மறைவிற்கு பிறகு வந்துள்ளனர். தகுதி உள்ளவர்களுக்கு தான் பதவி வழங்கப்படுகிறது. எனவே அ.தி.மு.க.விலிருந்து வந்தவர்கள் என பிரித்துப் பார்ப்பது தவறு. எங்கள் உடம்பில் தி.மு.க.ரத்தம் தான் ஓடுகிறது.நீண்ட காலமாக குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்குவது தொடர்பான அரசாணை விரைவில் வெளியிடப்படும். அதில் எல்லா விளக்கமும் இருக்கும். முதல்வர் அவர்கள் பட்டா வழங்கும் திட்டத்தை துவங்கி வைப்பார்.நமது ஊரில் நான் துவங்கி வைப்பேன். ஆட்சியர் அலுவலகம் திறப்பது தொடர்பாக ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. அதனை விரைவுப்படுத்தி திறப்பதற்கு ஏற்பாடு செய்வோம்.தென்காசி மாவட்டத்திற்கு தேவையான ஆயுதப்படை காவல் மைதானம் குடியிருப்பு அமைப்பதற்கான இடமும் தேர்வு செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

தேனி வடக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் - பொது உறுப்பினர் கூட்டங்கள்!

மாவட்டக் கழக செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. அறிக்கை!

தேனி, பிப்.20-

தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்ச்செல்வன். எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தேனி வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் தேனி என்.ஆர்.டி நகரில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நாளை (21.02.2025- வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் மாவட்ட கழக அவைத்தலைவர் பி.டி செல்ல பாண்டியன் தலைமையில் நடைபெற உள்ளது மற்றும் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றியம் நகரம்,பேரூர் வாரியாக கீழ் கண்ட தேதிகளில் கீழ்க் கண்ட இடங்களில் நடைபெற உள்ளது இக்கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர்கள் ,மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர் கழக, பேரூர் கழக செயலாளர்கள் சார்புஅணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிகள், கழக மூத்த முன்னோடிகள், பாகமுகவர்கள்,பூத்கமிட்டி உறுப்பினர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்ச்செல்வன். எம்.பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்

ஒன்றியம்-எஸ்.கே.மஹால் உப்புக்கோட்டை,

23.02.2025- மாலை 4.00 மணி-பெரியகுளம் வடக்கு ஒன்றியம்-மோகன்தாஸ் மண்டபம் பெரியகுளம், மாலை 5 மணி- பெரியகுளம் நகரம்- நகர் கழக அலுவலகம் பெரியகுளம்

மாலை 6.00 மணி- பெரியகுளம் தெற்கு ஒன்றியம்-வேளாளர் திருமண மண்டபம் ஜெயமங்கலம்

மாலை 4.00 மணி- மார்கையன் கோட்டை பேரூர்-சமுதாயக்கூடம் மார்கையன் கோட்டை, மாலை 5 மணி -குச்சனூர் பேரூர், மாமன்னர் திருமலை நாயக்கர் மண்டபம்,

24.02.2025-மாலை 6.00 மணி- மேலசொக்கநாதபுரம் பேரூர் -கே.கே.கே திருமண மண்டபம் மேலசொக்கநாதபுரம்.மாலை 7.00 மணி - மீனாட்சிபுரம் பேரூர்- கண்டியம்மன் கோவில் திருமண மண்டபம், காலை 9.00 மணி - கெங்குவார்பட்டி பேரூர், எஸ்.பி.டி. மண்டபம்

கெங்குவார்பட்டி, காலை 10.00 மணி - தேவதானப்பட்டி பேரூர், ஜெயராஜ் மண்டபம் தேவதானப்பட்டி , காலை 11.00 மணி -வடுகபட்டி பேரூர் - வேளாளர் மண்டபம் வடுகபட்டி

25.02.2025 - காலை 12.00 மணி-தாமரைக்குளம் பேரூர் - வ.உ.சி திருமண மண்டபம்

தாமரைக்குளம்,மதியம் 12.30 மணி-தென்கரை பேரூர் - தனுஸ்கோடி திருமண மண்டபம் டி.கள்ளிப்பட்டி , மாலை 4.00 மணி -பழனிசெட்டி பட்டி. பேரூர் - தேவாங்கர் செட்டியார் சமுதாய மண்டபம். பழனிசெட்டி பட்டி

மாலை 5.00 மணி - பூதிப்புரம் பேரூர்-/ சுருளிப்பெருமாள் ஊஞ்சாலை திருமண மஹால் பூதிப்புரம்

மாலை 6.00 மணி- வீரபாண்டி பேரூர் - தனலட்சுமி திருமண மண்டபம் வீரபாண்டி

பொருள் : தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா, கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே.பி.கே. தங்கவேலு
பிப்ரவரி 20 (2017)

ஆலங்குடி பகுதியில், கிளைச் செயலாளராக கழகப் பணியாற்ற துவக்கிய இவர், ஆலங்குடி வட்ட துணைச் செயலாளர், திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து பணியாற்றிய இவர், மறைவெய்தியபோது புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றினார்.

பாத்தம்பட்டி ஊராட்சி தலைவராகவும், திருவரங்குளம் ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.